# 8

# இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?

*நீங்கள் உங்கள் நகரத்தின் சாலையில் நடந்து செல்லும்போது, செய்தி நிருபர் ஒருவர் உங்களிடத்தில் வந்து, "உலகத்தின் தொடக்கத்திலிருந்து நடந்துள்ளவற்றில் நீங்கள் மாபெரும் நிகழ்ச்சியாகக் கருதும் ஒரே சம்பவம் எது?" என்று கேட்டால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? அவருக்கு நீங்கள் எவ்விதம் பதில் அளிப்பீர்கள்? மனித வரலாற்றின் எந்த நிகழ்ச்சியானது மற்ற எல்லா நிகழ்ச்சிகளைக் காட்டிலும் பெரிதாய் இருக்கின்றது? கர்த்தராகிய இயேசு நமது இரட்சகராக இவ்வுலகத்திற்கு வந்த நிகழ்ச்சி என்பதே எனது பதிலாக இருக்கும்.*

*உலக வரலாற்றில் மிகவும் நாடி அடையக்கூடிய நிகழ்ச்சியாக இருப்பது தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் வாழ்க்கையே-அவரது திரு அவதாரம், அவர் மாம்சத்தில் வந்தது என்பவைகளே ஆகும். இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதை எப்படியும் விட்டுவிடாதிருக்க வேண்டும் என்று கருதவில்லை என்பதாகப் பவுல் எழுதினார். அவர், "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலி. 2:7). யோவானின் நற்செய்தியின்படி, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. 1:14).*

*கிறிஸ்துவானவர் தெய்வீகமேயில்லாதவர் போல அந்த அளவுக்கு மனித இயல்புடனிருந்தார்; மற்றும் அவர் மனித இயல்புக்கு அப்பாற்பட்டவர் போல அந்த அளவுக்கு தெய்வீகமானவராகவும் இருந்தார்* என்று நாம் சொல்லக் கூடும். இயேசு மனிதராக வந்தபோது மற்ற எல்லா மனிதர்களும் பிறந்தது போலவே அவரும் பிறந்ததின் மூலம் மனித குலத்துடன் அவர் தம்மை முழுமையாக அடையாளப் படுத்திக் கொண்டார் (லூக். 2:6), அவர் எல்லா மனிதர்களைப் போலவே வளர்ந்தார் (லூக். 2:40), மனித குலத்தின் எல்லா சந்ததியார்களைப் போலவே அவரும் எல்லாப்பாடுகளையும் பட்டார் (எபி. 5:8, 9), மற்றும், வியாதி, அழிவு மற்றும் மரணம் இவற்றால் - மனிதர்கள் சிலுவையிலே கொல்லக்கூடிய அளவுகூட - பாதிக்கப்படும் ஒரு சரீரத்திலே அவர் வாழ்ந்தார் (பிலி. 2:8, 9). அவர் முற்றிலும் ஒரு மனிதராகவே இருந்தார், அதனால் மனுஷ குமாரனானார்; இருந்தாலும் அவர் முற்றிலும் தெய்வீகமானவராதலால் தேவ குமாரனாவும் இருந்தார் (எபி. 2:14, 17, 18). மனித இயல்பையும், தெய்வீக இயல்பையும் ஒரு நபர்த்துவத்துக்குள் இணைக்கும் முழுமையான இணைப்பாளராக அவர் இருந்தார். அவர் தமது தெய்வீக இயல்பை தியாகம் செய்யாமலே மனிதராக ஆனார்; அவர் நம்மைப் போலவே ஆன போதிலும் தெய்வீகமானவராகவே இருந்தார்.

இயேசு இந்த பூமிக்கு வந்த இவ்விதமான இயல்பானது வினயமான சில கேள்விகளை எழுப்பக்கூடியதாக இருக்கின்றது: இயேசு ஏன் இவ்விதமாக இந்த பூமிக்கு வந்தார்? மனித குலத்திற்குள் அவர் பிரவேசித்ததற்கான நோக்கம் என்ன? தேவனுடைய தெய்வீகமான மகன் எதற்காக முழுமையான மனிதனாகவே ஆகும்படித் தம்மைத் தாழ்த்தினார்? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் யாவும் ஒரே ஒரு வாக்கியத்தில் சுருக்கமாகத் தரப்பட முடியும்: *"தமது ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலம் தமது நாமத்திற்கென்று தமது சபையென்று அவர் அழைக்கும் மக்களை, அழைப்பதற்காகவே அவர் வந்தார்"* (மாற். 10:45; லூக். 19:10).

வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், சபை என்பதே அவர் இந்த பூமிக்கு விஜயம் செய்ததின் விளைவாக இருக்கின்றது. இயேசு ஒரு புத்தகத்தை எழுதவில்லை, ஒரு கல்லூரியை நிறுவவில்லை அல்லது சரீரப் பிரகாரமான ஒரு குடும்பத்தை நிர்மாணிக்கவில்லை.

அவருடைய இப்பூமிக்குரிய ஊழியத்தில் உண்மையாக உண்டாக்கப் பட்டது சபை மட்டுமே. அவர் தாம் கட்டி எழுப்புவதாகக் கூறிய சரீரம் என்பது அவர் “என் சபை” (மத். 16:18) என்ற சொற்றொடர் களால் அழைத்த ஆவிக்குரிய ஒரே சரீரம் மட்டுமே. இயேசு தமது ஊழியத்தில் நிலைநிறுத்திய ஒரே அஸ்திபாரம் என்பது சபையின் அஸ்திபாரம் மட்டுமே. ஆகையால், கிறிஸ்துவின் பூமிக்குரிய வருகையில் ஒரே ஒரு படைப்பாக இருந்தது சபை மட்டுமே என்று சொல்ல முடியும்.

## நற்செய்திப் புத்தகங்களால் உறுதிப் படுத்தப்பட்டது

இந்த சத்தியமானது நற்செய்திப் புத்தகங்களால் வலிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்திப் புத்தகம் ஒவ்வொன்றும் இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் நிலை நாட்டவிருந்த பரலோக இராஜ்யமாகிய இந்த சபையையே சுட்டிக் காட்டி, அதை நோக்கியே வழி நடத்துகின்றதாய் உள்ளது.

கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி நற்செய்திப் புத்தகங்களில் படிக்கும் ஒருவர் அவரது ஊழியத்தைப் பற்றி எழும்பும் பின்வரும் மூன்று கருத்துக்களைக் கண்டுபிடிக்கின்றார்: (1) அவரது ஊழியம் ஒரு விஷயத்தை நிறைவேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டது, (2) அவர் ஊழியம் செய்த முறையானது, மேலான ஒன்றை ஆயத்தம் செய்வதற்காக இருந்தது, மற்றும் (3) அவரது ஊழிய முறைமையானது தொடர்ந்து செய்யப்பட வேண்டியதாய் இருந்தது.

முதலாவதாக, இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்தபோது அவர் உலக முழுவதற்கும் சுவிசேஷம் அறிவிக்கும் பணியை மேற்கொண் டிருக்கவில்லை என்பதை நற்செய்திப் புத்தகங்கள் சுட்டிக்காட்டு கின்றன. அவர் அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்ட பிறகு, அவர்கள் உலக முழுவதும் சென்று பிரசங்கிக்க வேண்டும் என்று கட்டளையிடவில்லை, மாறாக “நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்” (மத். 10:5ஆ, 6) என்று கூறியதன் மூலம் அவர்களது ஆர்வத்தை அமைதிப்படுத்தினார். இயேசு தமது ஊழியத்தைப் பலஸ்தீனத்தில் மட்டுமே நிறைவேற்றினார் என்பது நம்மைத்

திகைப்படையச் செய்யக் கூடியதாய் இருக்கின்றது. ரோம உலகத்தின் புறம்பே இருந்த நாடுகளுக்கு அவர் சென்றதே இல்லை. உலகத்தின் ஒரு சிறு பகுதியில் பிரசங்கித்துப் போதித்தோடு அவரது ஊழியம் நிறைவேறியது. இயேசு தமது ஊழியத்தில் உலக முழுவதும் சென்றிருப்பாரேயானால், அவர் தமது ஊழியத்தை வித்தியாசமான முறையில் நிறைவேற்றியிருப்பார், வித்தியாசப்பட்ட விரிவான உபாயங்களையும், முறைகளையும் அவர் கையாண்டிருப்பார்.

இரண்டாவதாக, இயேசுவின் வாழ்வு, பணிகள் மற்றும் மரணம் ஆகியவை வரப்போகிற ஒன்றுக்கு ஆயத்தம் செய்பவைகளாகவே இருந்தன என்பதை நற்செய்திப் புத்தகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. "இயேசு, மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத். 4:17ஆ) என்று பிரசங்கித்தார். அவர் தமது சீஷர்களுக்கு, "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (மத். 6:10அ) என்று ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். அவருடைய அற்புதங்கள் மற்றும் பதில் செயல்களினால் கவரப்பட்டு வந்த கூட்டத்தார், அவரைத் தங்களின் பூமிக்குரிய அரசராக்கும் கருத்தில் அடித்துச் செல்லப்படாதபடிக்கு அவர் மிகுந்த எச்சரிக்கையுடன் தடை செய்தார். அவர் தமது கால அட்டவணையை மக்கள் கூட்டத்தார் தமக்கு ஆணையிட அனுமதிக்கவில்லை. அவர் ஒரு அற்புதம் செய்யும்போது, சில சமயங்களில் அந்த அற்புதத்தைப் பெற்றவரிடம், "ஒருவருக்கும் இதைச் சொல்ல வேண்டாம்" (மத். 8:4)[1] என்று கேட்டுக் கொண்டார். அவர் பன்னிரெண்டு அப்போஸ் தலர்களைத் தேர்ந்தெடுத்து, தனிப்பட்ட விதத்தில் அவர்களுக்குப் பயிற்சியளித்தார், ஆனால் அவர் அவர்களை விட்டுச் சென்ற பிறகு அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்கென்றே அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார் என்பது உறுதியானதாகும் (யோவா. 14:19).

மூன்றாவதாக, இயேசுவின் ஊழியமானது முழுமையடையாத உணர்வைப் பெற்றிருப்பதாகவே நற்செய்திப் புத்தகங்கள் சித்தரிக் கின்றன. பிதாவானவர் எதைச் செய்யும்படியாக இயேசுவை அனுப்பி னாரோ, அதையே அவர் செய்தார்; ஆனால் அவர் தமது பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவில், தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வரும் மற்ற நிகழ்ச்சிகள் மற்றும் வெளிப்படுத்துதல்கள் ஆகியவற்றை எதிர்நோக்கியிருப்பதற்குத் தமது அப்போஸ்தலர்களைத் தயார்ப் படுத்தினார். இயேசு, அப்போஸ்தலர்களிடம், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச்

*சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவா. 14:26) என்று கூறினார். மேலும் அவர் அவர்களிடம், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங் களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13) என்றும் கூறினார். உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இயேசு தாம் பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்று முன்னர், தமது அப்போஸ்தலர்களை, அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமை விட்டுப் போகாமல் இருக்கும்படிக் கட்டளையிட்டார். அந்தப் பெலனைப் பெற்றவுடன் அவர்கள் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்க வேண்டியதாயிருந்தது (லூக். 24:46-49).*

*நமது கர்த்தருடைய மரணத்திற்கு முன்னும், பின்னும் அவரது ஊழியத்தின் இந்தப் பண்புகள், அவரது சபையாகிய ராஜ்யத்தின் முக்கியக் கூறுகளை இணைத்து இப்பூமிக்கு கொண்டு வருவதற் காகவே அவை செய்யப்பட்டன என்பதைத் தெளிவாகக் காண் பிக்கின்றன. மத். 16:18ல் தமது பூமிக்குரிய ஊழியத்தின் பாரத்தை இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அறிவித்தார்: "நீ பேதுருவா யிருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." இவ்விதமாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை; பிரசங்கிக்கப் படும்படி ஒரு சுவிசேஷம் இருப்பதற்காகவே அவர் வந்தார்.*

*தெற்கு டகோட்டாவில் உள்ள குறிப்பிடத்தக்க ரஷ் மோர் மலையில் சிற்ப வேலைப்பாடு செய்த புகழ் பெற்ற சிற்பியாகிய கட்சன் போர்க்ளம் அவர்கள் தலைநகரான வாஷிங்டன் டி.சி.யிலும் ஆபிரகாம் லிங்கனின் தலைச் சிற்பம் ஒன்றை செதுக்கினார். அவர் தமது தொழிற் கூடத்தில் பெரிய சலவைக்கல் ஒன்றில் இருந்து அதைச் செதுக்கினார். ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தத் தொழிற் கூடத்தைக் கூட்டிச் சுத்தம் செய்யும் ஒரு பெண் முதன்முறையாக உயிருள்ள தலை போன்று தெரிந்த அந்த சிற்பத்தைப் பார்த்தபோது, ஒரு கணம் திகைத்துபோய் நின்று, "இந்தக் கல்லினுள் லிங்கன் பூட்டப்பட்டிருந்ததை அவர் எப்படி அறிந்தார்?" என்று கேட்டாள். மற்றவர்கள் காண முடியாததை போர்க்ளம் கண்டார் என்பதே அவளது கேள்விக்குப் பதில் ஆகும். அவர் ஒரு கலைஞரின் கண்கள்*

*உடையவராய், சிற்பியின் உள்ளுணர்வு கொண்டவராய் இருந்தார். அவரது திறமையுள்ள கைகளும், கற்பனைத் திறன் உள்ள மனமும் சேர்ந்து அந்த முகத்தை உருவாக்கும் முன்பே அவர் அதை அந்தக் கல்லில் கண்டார்.*

*நற்செய்திப் புத்தகங்களின் உதவியுடன் நாம், இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தில் பார்த்ததைக் காண முடியும். வரப்போகிற இராஜ்யத்தின் தரிசனமும் அதற்கான தயாரிப்புப் பணியும் அவரது ஊழியத்தில் பூட்டப்பட்டுக் கிடந்தன. அவர் அதைப் பற்றிப் பிரசங் கித்தார், அதற்காக ஆயத்தம் செய்தார், அதைத் தமது இரத்தத்தினால் விலைக்கு வாங்கினார்.*

## நடபடிகளினால் நிச்சயப்படுத்தப்பட்டது

*புதிய ஏற்பாட்டுப் புத்தகமாகிய நடபடிகள், இயேசுவின் ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளுக்குப் பின்னால் இராஜ்யமாகிய சபையை உண்டாக்குவதன் திட்டவட்ட மான நோக்கம் இருந்தது என்று நிச்சயப்படுத்துகிறது. நற்செய்தி புத்தகங்கள் சத்தியத்தை ஒளிவு மறைவின்றி அறிவிக்கின்றன. மற்றும் வாழுகின்ற வண்ணமிகும் விளக்கங்களினால் அப்போஸ்தலருடைய நடபடிகள் அதை நிச்சயப்படுத்துகின்றன.*

*நமது கர்த்தர் பரலோகத்துக்கு ஏறிச் சென்று பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே நாளன்று, அப்போஸ்தலர்களின்மேல் பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழியப்பட்டார் (அப். 2:1-4); இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற சுவிசேஷமானது முதன்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டது; மக்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, தங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்று இந்த சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி அழைக்கப் பட்டனர் (அப். 2:38; லூக். 24:46, 47); பிரசங்கிக்கப்பட்ட வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஏறக்குறைய மூவாயிரம் பேர் இந்த அழைப்பை ஏற்று, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் (அப். 2:41). ஆகவே, இரவைத் தொடர்ந்து பகல் வருவது போலவே, இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்து நமது கர்த்தருடைய சபை பிறந்தது.*

*அப்போஸ்தலருடைய நடபடிகளின் எஞ்சியுள்ள வரலாறு, சபையானது பரிசுத்த அன்பின் ஜுவாலையாக எருசலேமில் இருந்து யூதேயா, சமாரியா அதற்கு அப்பால் ரோமராஜ்யத்தின் மற்ற பாகங்கள்*

ஆகியவற்றில் பரவத் தொடங்கியதன் வரலாறு ஆகும். நடபடிகளில், ஏவப்பட்ட பிரசங்கம் செய்யப்பட்ட போதெல்லாம், அதைக் கேட்டவர்கள் பிரசங்கிக்கப்பட்ட வசனத்துக்குக் கீழ்ப்படிந்து சபைக்குள் பிரவேசித்தனர். நற்செய்திப் பயணம் நடைபெற்ற போதெல்லாம், உலகத்தின் புதிய பகுதிகளைப் பற்றி சபைகள் விழிப்புணர்வு பெற்றன. பவுலின் நற்செய்திப் பயணங்கள் மூன்றிலும், எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் உலகெங்கிலும் புதிய சபைகள் நிலைநாட்டப்பட்டன (ரோமர் 15:19). கிறிஸ்துவின் வருகையினால் சபை வெளியாயிற்று என்ற மிகப் பெரிய முடிவை கவனிக்காமல் ஒருவர் நடபடிகள் புத்தகத்தைப் படிக்க முடியாது.

ஒருமுறை, பிரசங்கியார் ஒருவர், "உலகத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் நாம் இயேசு பின்பற்றின அதே நடைமுறை களைப் பின்பற்ற வேண்டும், பன்னிரெண்டு மனிதர்களை நாம் ஒன்று கூட்டி எதிர்கால ஊழியத்திற்கென்று நாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், இயேசு தாம் பயன்படுத்திய வழிமுறைகளில் நாம் எப்படி இவ்வுலகில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று காண்பித்திருக்கின்றார்" என்று சொன்னார். நிச்சயமாகவே, இயேசு தாம் செய்த ஒவ்வொன்றையும் முழு நிறைவானதாகவே செய்தார். என்றாலும், அவரது ஊழியத்தைப் பற்றிய முழுமையான ஒரு பாடமானது, அவர் உலகமுழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியத்தைச் செய்யவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. அவரது ஊழியமானது சபைக்கு ஒரு அஸ்திபாரத்தைப் போடுவ தாகவே இருந்தது; உலக முழுவதற்குமான சுவிசேஷ ஊழியத்திற்கு ஒரு முன்மாதிரி வரைபடத்தையே அந்த ஊழியம் விட்டுச் சென்றுள்ளது. அவரது ஊழியத்தில் அவர் கையாண்ட அணுகு முறைகள், அவருடைய தனிச் சிறப்புள்ள ஊழியத்திற்கு ஏற்ற வழிமுறைகளாகவே இருந்தன, தம்மைப் பின்பற்றுவோர்களுக்கு உலக முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கும்படியான ஊழியத்தை ஒப்படைத் திருந்தார்-இது அவரது ஊழியத்திலிருந்து மாறுபட்டதாகவே உள்ளது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அப்போஸ் தலர்களும், மற்ற ஏவப்பட்ட மனிதர்களும், நமது கர்த்தர் பயன் படுத்திய அணுகுமுறைகளையே பயன்படுத்துவதாக நாம் காண்பதில்லை. அவர் உபதேசிக்கப் பின்பற்றிய அதே வழிமுறைகளை அவர்கள் பின்பற்றவில்லை, அதாவது அவர்கள் ஒவ்வொருவரும் பன்னிரெண்டு மனிதர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்குப்

*பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அந்த ஏவப்பட்ட மனிதர்கள் தங்கள் பிரசங்கம் மற்றும் போதனை மூலம் சபைக்குள் மக்களைக் கொண்டு வந்தனர். இந்தப் புதிய கிறிஸ்தவர்கள் சபையின் ஒரு பாகமாக இருந்து, ஊழியம் மற்றும் சுவிசேஷ அறிவிப்புக்கென்று சபையாலேயே செறிவூட்டப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு, நம்பிக்கை யூட்டப்பட்டு, போதிக்கப்பட்டனர். இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் பலனாகவே சபையின் வாழ்வு இருப்பதாக நடபடிகளின் புத்தகத்தில் நமக்குக் காட்டப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் 48 சதவிகிதம் பகுதியில் கிறிஸ்துவின் வாழ்வு பற்றியும், மற்ற 52 சதவிகிதம் பகுதியில் அவருடைய வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் விளைவாக உண்டான சபையைப் பற்றியும் கூறப்படுகின்றது.*

## நிருபங்களினால் மறுபடியும் உறுதிப்படுத்தப்பட்டது

*சபையானது, கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணத்தின் இயல்பான கனியாகவே இருக்கின்றது, என்ற சத்தியத்தை நடை முறைப்படுத்துவதைப் புதிய ஏற்பாட்டின் நிருபங்கள் வலியுறுத்து கின்றன. இந்த சத்தியத்தை நற்செய்திப் புத்தகங்கள் உறுதிப்படுத்து கின்றன, நடபடிகள் புத்தகம் இதைப் பெருக்கமடையச் செய்கின்றது, மற்றும் நிருபங்கள் இதை நடைமுறைப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் இருப்பதன் மூலம் அவருடைய வாழ்வுக்கு நாம் பதில் கொடுப்பது எப்படி என்பதை நிருபங்கள் நமக்குக் காட்டுகின்றன.*

*விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் மூலம் கிறிஸ்துவுக்குள் வருவதைத் தேர்ந்து கொண்ட மக்களுக்கு இந்த நிருபங்கள் எழுதப் பட்டன. அவர்கள், கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த் தெழுதல் ஆகியவை புதியதாகக் கவனிக்கப்பட்ட காலத்தில் வாழ்ந் தவர்கள் ஆவார்கள். கிறிஸ்துவானவர் கர்த்தரென்று கனப்படுத்தப் படுகின்றார் என்பதும், நாம் அவரது சபையாராக இருக்கும் பொழுதுதான் அவரது மனித வாழ்க்கை நமக்குள் சரியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதுமே ஏவப்பட்ட மனிதர்களுடைய செய்தியின் உட்கருத்தாக இருக்கின்றது.*

*கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக வாழ்ந்து, அதற்கென்று ஊழியம் செய்யும்படியாகவே ஒவ்வொரு நிருபத்திலும் வற்புறுத்தப்படுகின்றனர். நிருபங்கள்*

எல்லாம் ஒன்றுகூட்டப்பட்டுப் பார்க்கப்படுகையில், எல்லா சூழ்நிலைகள் மற்றும் வித்தியாசமான இடங்களிலும், கிறிஸ்துவின் சபையாராக இருப்பது மற்றும் வாழ்வது எப்படி என்பதைக் காட்டும் "வழிகாட்டிக் குறிப்பேடாக"வே அவை இருக்கின்றன. கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை நமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவது எப்படி என்று அவைகள் நமக்குப் போதிக்கின்றன.

கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் நாம் அவரது சரீரத்தில் பிரவேசிப்பதன் மூலம் இயேசுவை நாம் கர்த்தரென்று ஏற்று அவருக்கு நம்மை ஒப்புக் கொடுக்கின்றோம். இந்த விசுவாசப் பதில்செயலின் நிறைவுச் செயலை கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதலோடு பவுல் இணைத்தார் (கலா. 3:27). நிருபங்களின்படி பார்க்கையில் விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து, இரட்சிப்புக்கான ஞானஸ் நானத்தைப் பெறாத வரையிலும் எவருமே இயேசுவின் சரீரமாகிய அவரது சபைக்குள் பிரவேசிப்பதுமில்லை, அவருக்குத் தம்மை ஒப்புக் கொடுப்பதும் இல்லை.

தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் நாம் ஒன்றுகூடி வாழ்ந்து, தேவனை ஆராதிக்கும்போது மட்டுமே நாம் இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் கனப்படுத்துகின்றோம். பவுல் பின்வருமாறு கூறினார்:

> யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா. 3:28).

> ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங் களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களா யிருக்கிறோம் (ரோமர் 12:4, 5).

> சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, … ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்

*களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப் பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.*

*நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1 கொரி. 12:25-27).*

*வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் ... பிரசங்கித்தான் (அப். 20:7).*

தேவனுடைய குடும்பமாக, கிறிஸ்துவின் சபையாக நாம் வாழ்ந்து மற்றும் தேவனை ஆராதிக்கத் தவறும்போது, கிறிஸ்து நிறைவேற்ற வந்ததை நாம் எடுத்துப் போட்டு விடுபவர்களாக, அவர் எதை நிலைநாட்ட மரித்தாரோ, அதை அழிப்பவர்களாக நாம் ஆகின்றோம்.

*இயேசு அவரது சரீரமாக, அவரது சபையாக இருக்கும்படிக்கு நம்மை அழைத்துள்ளார்.* அவருடைய மக்கள் கிறிஸ்துவின் சபை தவிர வேறு எந்த ஒரு சபை அல்லது சரீரமாக இருந்ததாக நிருபங்கள் விளக்கம் தருவதே இல்லை. நிருபங்களின்படி பார்த்தால், இயேசு அவரைப் பின்பற்றுவதற்கு ஒரே ஒரு வழியையும், அவருக்கு ஊழியம் செய்வதற்கு ஒரே ஒரு வழியையும், அவர் அளிக்கும் இரட்சிப்பையும் அவரது இரத்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கு ஒரே ஒரு வழியையும் மட்டுமே படைத்துள்ளார். அவரது ஆவிக்குரிய சரீரமாக இவ்வுலகத்தில் விசுவாசத்துடன் வாழ்வதே அந்த வழியாகும்.

ஒரு சிறு பெண் தனது வீட்டின் ஒரு மூலையில் வேதாகமம் ஒன்றைப் பார்த்தாள். அவள் அதை எடுத்து தனது தாயினிடத்தில் சென்று, ‘‘அம்மா இது என்ன புத்தகம்?’’ என்று கேட்டாள். அவளுடைய தாய் அதற்கு, “அது தேவனுடைய வேதாகமம் என்ற புத்தகம்’’ என்றாள். குத்தப்பட்ட உள்ளுணர்வு கொண்ட அந்தச் சிறுபெண், “நாம் இதை என்றுமே பயன்படுத்தவில்லையே, எனவே இதை அவருக்கே திருப்பி அனுப்பி விட்டால் என்ன?’’ என்று கூறினாள்.

உண்மை என்னவென்றால், நாம் அதை வாசித்தும் கூட இன்னும் பயன்படுத்தாமல் இருக்கக் கூடும். ஒவ்வொரு உரையாடலிலும் நாம் அதை மேற்கோள் காட்டியும், ஒவ்வொரு நாளும் அதை வாசித்தும் கூட இன்னும் அதை நாம் நடைமுறைப்படுத்தத் தவறியிருக்கக் கூடும். வேதாகமத்தை உண்மையில் நடைமுறைப்

படுத்துவது என்பதற்கு நாம் கிறிஸ்துவின் சபையை செயல்முறை வழியில் பின்பற்றுவது தேவையாய் இருக்கின்றது. வேதாகமத்தில் நாம் எப்படியிருக்க வேண்டும் என்று கூறப் படுகின்றபடி நாம் ஆகும்போது மட்டுமே நாம் அதைச் சரியான மற்றும் தகுதியான முறையில் பயன்படுத்துகின்றவர்கள் ஆகின்றோம்.

## முடிவுரை

கிறிஸ்து மனிதராக ஆனதின் முழு ஊழிய நோக்கம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை உண்டாக்குவதே என்பதுதான் புதிய ஏற்பாட்டின் ஒருங்கிணைந்த போதனையாக இருக்கின்றது. நற்செய்திப் புத்தகங்கள் இதனை வாக்குத்தத்தம் செய்வதன் மூலம் உறுதிப்படுத்துகின்றன, நடபடிகளின் புத்தகம் இதனைச் சித்தரிப் பதன் மூலம் நிச்சயப்படுத்துகின்றன, நிருபங்கள் இதனை வாழ்க்கை யின் நடைமுறையில் பயன்படுத்துவதன் மூலம் மறுபடியும் உறுதிப் படுத்துகின்றன.

நமது இரட்சிப்புக்காக வாழ்ந்து, மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவருக்கு பதில் அளிக்கும் வகையில் அவரது சபையில் நாம் பிரவேசித்து, விசுவாசமுள்ள வாழ்க்கை வாழ்வது என்பதுதான் நமக்குள்ள ஒரே வழி என்று புதிய ஏற்பாடு கூறுவதால், இதைத் தொடர்ந்து ஒரு கேள்வி வருகின்றது: "நீங்கள் அவரது சரீரத்தில் இருக்கின்றீர்களா?" வாழ்க்கையின் முடிவை நெருங்கும்போது, நீங்கள் வாழ்வின் உண்மையான நோக்கத்தை முற்றிலுமாய்த் தவற விட்டு விட்டீர்கள் என்று கண்டறிவது எவ்வளவு பெரிய தவறாகின்றது! ஒருவேளை, இதைக் காட்டிலும் மிகுந்த வருத்தத்திற்குரியது எது வென்றால்-தேவனுடைய குமாரனானவர் இந்த பூமிக்கு வந்ததின் நோக்கத்தை நாம் தவறவிடுவதேயாகும். தேவனுடைய தெய்வீக செய்தியான இரட்சிப்பை, புதிய ஏற்பாடு நமக்கு கொடுப்பது நிச்சயமாயிருப்பது போலவே, கிறிஸ்து இந்த பூமிக்கு மனித உருவில் வந்தது நிச்சயமாயிருப்பது போலவே, அவருடைய சரீரத்தில் பிரவேசிக்காத எவரும், தங்களின் வாழ்க்கைப் பயணத்தின் முடிவில் கிறிஸ்து இந்த பூமிக்கு வந்ததின் நோக்கத்தைத் தவறவிடுவார்கள் என்பதும் வெகு நிச்சயமாய் இருக்கின்றது. இதுவே புதிய ஏற்பாடு முழுவதிலும் உள்ள அடிப்படையான உபதேசங்களின் முடிவு ஆகும்!

கிறிஸ்து இங்கு வாழ்ந்த தமது சுருக்கமான வாழ்வின் முடிவை

நெருங்கும்போது, அவரால், "பிதாவே, நீர் என்னிடத்தில் செய்யும் படிக் கேட்டுக் கொண்டவைகளை நான் செய்திருக்கிறேன். எனக்காக நீர் ஒப்புவித்த ஊழியத்தை நிறைவேற்றியிருக்கிறேன்'' என்று கூற முடிந்தது. அரண்மனையில் நீண்ட காலம் வாழ்ந்து, சுயநல நோக்கத் திற்காக அரசாட்சி செய்வதைக் காட்டிலும், சில வருடங்களே வாழ்ந் தாலும், தேவனுடைய சித்தம் என்ற வட்டத்திற்குள் வாழ்வது என்பது மிகவும் சிறந்ததாகும். ஏராளமான மக்கள், தங்கள் வாழ்வின் முடிவில், "தேவனே நீர் எனக்குக் கொடுத்த ஆயுசு நாட்களில் எல்லா வருடங் களிலும் பூமியில் நான் வாழ்ந்து முடித்தேன், நான் விரும்பியவைகளை மட்டுமே நான் செய்திருக்கிறேன், எனக்கென்று நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஊழியத்தையே நான் விடாது பற்றியிருந்தேன்'' என்று மட்டுமே கூற முடிகின்றது.

நாம் நமது வாழ்க்கையின் முடிவை நெருங்கும்போது, நம்மால், "கர்த்தாவே, வேதவசனங்களின் மூலம் நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர் என்பதைக் கண்டறிந்துள்ளேன், அந்த ஊழியத் திற்கு என்னையே நான் ஒப்புக் கொடுத்திருக்கிறேன். உம்மை இந்த பூமியில் மகிமைப்படுத்த உண்மையுடன் நான் முயற்சி செய்திருக் கின்றேன், நீர் எனக்கு கொடுத்த திட்டத்தின்படி நான் வாழ முயற்சி செய்திருக்கின்றேன். நான் கிறிஸ்துவின் சபையாராக வாழ்ந்திருக் கிறேன்'' என்று கூற முடியலாம்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 310 ம் பக்கங்களில்)*

1. உலக வரலாற்றில் நடந்த நிகழ்ச்சிகளிலேயே மாபெரும் நிகழ்ச்சி எது? உங்கள் பதிலுக்கான காரணம் ஒன்றைக் கொடுக்கவும்?
2. இயேசு முற்றிலுமாகவே மனிதராயிருந்தாரா அல்லது ஒரு பகுதி மட்டும் மனிதராயிருந்தாரா?
3. இயேசு முற்றிலுமாகவே தெய்வீகமானவரா அல்லது ஒரு பகுதி மட்டும் தெய்வீகமானவரா?
4. இயேசு எதற்காக இந்த பூமிக்கு வந்தார்? எந்த ஒரு நோக்கத்தை நிறைவேற்ற அவர் வந்தார்?
5. வரப்போகிற ஒன்றுக்கு ஆயத்தம் செய்வதாகவே இயேசுவின் ஊழியம் இருந்தது எவ்வாறு என்று காட்டவும்.

6. *புதிய ஏற்பாட்டு நிருபங்களின் பணி என்ன?*
7. *இயேசுவின் சபையாராயில்லாமல், நாம் அவரது வாழ்வுக்குப் பதில் அளிக்க முடியுமா?*
8. *இயேசுவின் சபையாராக நாம் வாழாமல் அவர் நமக்கென்று வைத்துள்ள ஊழியத்தை நம்மால் நிறைவேற்ற முடியுமா?*

## வார்த்தை உதவிகள்

***சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுதல்*** - *தேவனுக்குக் கீழ்ப்படியும் மக்களாக்கப்படுதல். இயேசுவின் பிரதான கட்டளையில் கூறப்பட்டுள்ளவைகளுக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் தேவனால் சேர்க்கப்படுதல் (அப். 2:41, 47).*

***கிறிஸ்துவின் சபை*** - *ஒரு கட்டிடம் அல்ல, ஆனால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த மற்றும் சபையில் சேர்க்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் ஆகும் (அப். 2:36-47ல் உள்ளதைப் போன்றது).*

***நிருபம்*** - *ஒரு கடிதம். புதிய ஏற்பாட்டின் அநேக புத்தகங்கள் (ரோமர் முதல் யூதா நிருபம் வரையில் உள்ளவை), கிறிஸ்தவர்களுக்குக் கடிதங்களாகவே எழுதப்பட்டன.*

***சுவிசேஷத்தை அறிவித்தல்*** - *சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறை. எடுத்துக்காட்டாக தீமோத்தேயு சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யும்படியாக 2 தீமோ. 4:5ல் அவருக்குக் கூறப்பட்டது.*

***புறஜாதியார்*** - *யூதரல்லாத ஒரு நபர்.*

***யூத மார்க்கம்*** - *யூதர்களின் இனம், அல்லது இஸ்ரவேலர்கள்; ஆபிரகாம், யாக்கோபு மூலமாக வந்த வம்சா வழியினர்.*

***தேவனுடைய இராஜ்யம்*** - *மனிதர்களின் இருதயங்களிலும் வாழ்க்கையிலும் இயேசுவின் அரசாட்சி அல்லது அதிகாரம் செய்கை.*

***நீதி*** - *குற்றம் அல்லது பாவம் எதுவும் இல்லாத இயல்பு. மனிதன் தானாகவே இந்த இயல்புள்ளவனாய் இருப்பது முடியாத செயலாகும், "நீதியுள்ளவராயிருப்பது" என்றால், தேவனிடத்தில் மன்னிப்பைப் பெற்று, தேவனுக்கு முன்பாகப் பாவத்தில் இருந்து சுத்திகரிக்கப்படுதல் என்று அர்த்தமாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்தின்படியே*

*அன்றாடம் வாழ்க்கை நடத்துவதன் மூலம் தேவனோடு இந்த சரியான உறவு முறையை வெளிக்காட்டுகின்றார்கள்.*

---

[1]*மத். 9:30; 12:16; 17:9; மாற். 1:43; 3:12; 5:43; 7:36; 8:30; 9:9; லூக். 4:41; 8:56; 9:21 ஆகியவற்றையும் காணவும். "ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்" என்ற வினோதமான கட்டளை பற்றி* J.W. *மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு எழுதினார்: "இராணுவ அதிகாரிகளின் இடையீட்டினால் மக்களின் உணர்வு தேவையற்ற வகையில் தூண்டப்படுவது போன்றதாகும் இது. இயேசுவின் போதனைகளைப் பற்றி அமைதியான முறையில் மக்களைச் சிந்திக்க விடாமல் இவை தடை பண்ணக்கூடும். (மாற். 1:45ஐயும் காணவும்). சில சமயங்களில், சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு, அவர் தமது கட்டளையை திருப்பிக் கொண்டு, அவர்களுக்குச் செய்தவற்றை மற்றவர்களுக்குக் கூறும்படியும் கட்டளையிட்டுள்ளார்"* (J.W. McGarvey, *The New Testament Commentary: Matthew and Mark* [N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 75).